2015 பிப்ரவரி 19]

அம்மா அவர்கள் புதிய வரலாற்றைப் படைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற, ஒட்டப்பிடாரம் பகுதியில் பேருந்துகளின் எண்ணிக்கை அதிகரிக்கின்றபோது, மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, அந்தப் பகுதியில் ஆய்வுகள் செய்யப்பட்டு, அதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்படும் என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவக்கொழுந்து, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

24—

குளிர்பதனக் கிடங்கு

***1138—திரு. ப. சிவக்கொழுந்து:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பண்ருட்டி தொகுதி, கண்டரக்கோட்டையில் காய்கறிகளைப் பாதுகாக்க குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெருப்பாற்றில் நீந்துகின்ற வீரமே, துணிவில், அறிவில், ஆளுமையில், தன்னைத்தானே செதுக்கி, ஏணிகளின் தயவின்றி, வான் தொட்ட வல்லமையே, உருக்குலையா உள்ளத்தோடு, முறுக்கேறிய வீரத்தோடு, தாயே! உன் விழி அசைவு கட்டளையில் ஸ்ரீரங்கத்தில் வெற்றி வாகை சூடிய (மேசையைத் தட்டும் ஒலி) வெற்றியின் வீரத் திருமகளை வணங்கி, 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு' என்ற அண்ணாவின் கோட்பாட்டினைப் பின்பற்றி, பேரவைத் தலைவரின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன்.*

கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதியின் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கை, ஏற்கெனவே கடலூர் மாவட்டத்தைச் சார்ந்த மாண்புமிகு வணிக வரி மற்றும் பத்திரப் பதிவுத் துறை அமைச்சர் அவர்களும் வலியுறுத்தியதன் அடிப்படையில், மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, பண்ருட்டி தொகுதி, கண்டரக்கோட்டையில் காய்கறிகளைப் பாதுகாக்க குளிர்பதனக் கிடங்கு அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசீலனை செய்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவக்கொழுந்து அவர்கள்.

திரு. ப. சிவக்கொழுந்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ருட்டி தொகுதி, அண்ணா கிராம ஒன்றியம், கண்டரக்கோட்டையைச் சுற்றியுள்ள பல கிராமங்களில், குறிப்பாக கட்டமுத்துப்பாளையம், மாளிகைமேடு, குச்சிப்பாளையம், பூண்டி, புலவனூர், இராசாபாளையம், தட்டாம்பாளையம், திராசு, கரும்பூர், உறையூர், சின்னப்பட்டு, கள்ளிப்பட்டு போன்ற கிராமங்களில் அதிகமாக முட்டைகோஸ், வெண்டைக்காய், கத்தரிக்காய், மிளகாய், கொத்தவரங்காய், பாகற்காய் ஆகிய காய்கறிகள் விளைகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்களும் காய்கறிகளைப் பாதுகாக்க குளிர்பதனக் கிடங்கு அமைக்க பரிசீலனை செய்யப்படும் என்று கூறியதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தப் பகுதி விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கை இது. எனவே, அந்தக் கோரிக்கையை ஏற்று இந்த நிதியாண்டிலேயே குளிர்பதனக் கிடங்கு அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் இதய

2015 பிப்ரவரி 19]

தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள், 'இரண்டு மடங்கு உற்பத்தி, மூன்று மடங்கு வருமானம்' என்ற உயர்ந்த இலட்சியத்தோடு உழவர்களின் உன்னதமான வாழ்விற்கு, தமிழகத்திலுள்ள பல்வேறு மாவட்டங்களில், 93 இடங்களில் ரூ.5,562.20 இலட்சம் மதிப்பீட்டில் குளிர்பதனக் கிடங்குகள் அமைத்து, விவசாயிகளினுடைய நலனை மிகுந்த கவனத்துடன், பரிவுடன் பாதுகாத்து வருகிறார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் பதிவு செய்து, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு மீண்டும் கொண்டு செல்லப்பட்டு, இந்த ஆண்டே குளிர்பதனக் கிடங்கு அமைக்க நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யப்படும் என்பதைத் தங்கள்மூலம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவக்கொழுந்து அவர்கள்.

திரு. ப. சிவக்கொழுந்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காய்கறிகளின் உற்பத்தியைப் பெருக்கி, விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பெருக்கவேண்டும் என்ற நோக்கத்தில், தமிழக அரசு பெருநகர காய்கறி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு வட்டாரத்திலும் விவசாய உற்பத்திக் கிடங்குகள் அமைக்கப்படும் என்றும், அவர்களைப் பாதுகாக்க, உறுப்பினர்களைக் கொண்ட Aggregator மையம் ஒன்று ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்படும் என்றும் அரசு அறிவித்தது. இந்த மையம் அமைக்கப்பட்டால், இதிலேயே இந்தக் குளிர்பதனக் கிடங்கும் வந்துவிடும்; விவசாயிகளும் பயன்பெறுவார்கள். அந்த வகையில், இதுவரை தமிழகத்தில் எத்தனை மாவட்டங்களில் Aggregator மையங்கள் அமைக்கப்பட்டன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10—55

மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களால்

அறிவிக்கப்பட்ட அனைத்து திட்டங்களும் தமிழகத்தில் முழுமையாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

25—

குடிநீர் சுத்திகரிப்பு நிலையம்

***29588—திரு. ஆர். சீனிவாசன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு நகரில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) ஆற்காடு நகரில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன் அவர்கள்.*

திரு. ஆர். சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி மாண்புமிகு*